இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 10-04-2025

# “சட்ட விரோத” ஆளுநர்!

தமிழ்நாடு ஆளுநராக வந்தது முதல் ஆர்.என்.ரவி சட்ட விரோத - மக்கள் விரோத - ஜனநாயக விரோத - தமிழர் விரோத -தமிழ் விரோத - மனித விரோதச் செயல்களைத் தான் செய்து வருகிறார் என்பதை இந்நாடு அறியும். இதனை இப்போது உச்சநீதிமன்றமும் உறுதி செய்துள்ளது.

கோடிக்கணக்கான மக்களால் உருவாக்கப்பட்ட சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கும் சட்டங்களுக்கு ஒப்புதல் தராமல் ‘ஊறு காய் பானைக்குள் போட்டு ஊற’ வைத்து விட்டார் ரவி. இது பற்றிக் கேட்டால், ‘நான் கையெழுத்திடாமல் வைத்திருந்தாலே அது நிராகரிக்கப்பட்டதாக அர்த்தம்’ என்று ஆணவத்தோடு கொக்கரித்தார் ரவி. அதுவும் பள்ளி மாணவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு தமிழ்நாடு அரசுக்குப் பதில் சொன்னார்.

**‘ஆளுநராக வந்துவிட்டதால் ஆளவந்ததாக அர்த்தம்’ அல்ல என்று உச்சந்தலையில் கொட்டி இருக்கிறது உச்சநீதிமன்றம். ‘ஆளுநர் ரவியின் செயல்பாடுகள் அனைத்தும் சட்ட விரோதம்’ என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் அவருக்கு உறைக்கும் படி சொல்லி இருக்கிறார்கள். அவரது தடித்த தோலுக்கு உறைக்குமா எனத் தெரியவில்லை.**

2020 - 23 காலக்கட்டத்தில் 14 மசோதாக்கள் தமிழ்நாடு அரசால் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் 2 மசோதாக்களை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி விட்டு, 12 மசோதாக்களை மாநில அரசுக்கே திருப்பி அனுப்பி விட்டார் ஆளுநர் ரவி. இந்த மசோதாக்களை சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றி மாநில அரசு சார்பில் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இரண்டாவது முறையும் அனுப்பினால் ஒப்புதல் தர வேண்டும். உடனே ஆளுநர், அந்த 12 மசோதாக்களையும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி விட்டார். அங்கு கிடப்பில் கிடக்கிறது. இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்குகள் நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போதே நீதிபதிகள் கிடுக்குப் பிடி கேள்விகளைக் கேட்டார்கள். ‘இந்தக் கேள்விகளுக்கு அரசியல் சட்டப்படி பதில் சொல்ல வேண்டும்’ என்று ஆளுநர் தரப்புக்கு அறிவுரையும் சொன்னார்கள்.

**‘இப்படி மசோதாக்களை முடக்கி வைத்தால் ஒரு மாநில அரசு எப்படி செயல்படும் என்று நினைக்கிறீர்கள்?’ என்றும் கேள்வி எழுப்பினார்கள். அப்போதே ஆளுநர் திருந்தி இருக்க வேண்டும். அது அவரால் முடியாது என்பதால் மந்தமாகவே இருந்தார். இறுதித் தீர்ப்பில் ஆளுநர் மந்த நிலையை அகற்ற ஷாக் கொடுத்து விட்டார்கள் நீதிபதிகள்.**

1. சட்டமன்றத்தில் இருமுறை நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், குடியரசுத் தலைவருக்கு அதனை அனுப்பி வைத்தது சட்டவிரோதம்.
2. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் கண்டிப்பாக ஒப்புதல் அளித்திருக்க வேண்டும்.
3. ஆளுநர் ஆர்.என் ரவியின் செயல்பாடு நேர்மையானதாக இல்லை.
4. பொதுவான விதிப்படியும், மாநில அரசின் ஆலோசனையின் படியும் மட்டுமே ஆளுநர் செயல்பட முடியும்.
5. மாநில அரசுக்கு ஆளுநர் வீண் தடைகளை ஏற்படுத்தக் கூடாது. அது மக்கள் நலன்களைப் பாதிக்கும் என்றும் நீதிபதிகள் அறிவுரை வழங்கினர்.
6. மாநில அரசுக்கு வழிகாட்டுபவராக ஆளுநர் இருக்க வேண்டுமே தவிர, அரசியல் எதிரி போல் செயல்படக் கூடாது.
7. தன் விருப்பம்போல் ஆளுநர் செயல்பட முடியாது .
8. தனக்கு சிறப்பு அதிகாரம் இருப்பதாகக் கருதுவது தவறு.
9. ஆளுநர் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது.
10. அரசின் செயல்பாடுகளுக்கு இடையூறாக இருக்கக் கூடாது.

- என்று நீதியரசர்கள் மகத்தான தீர்ப்பை வழங்கினார்கள்.

“ஆளுநர் அரசியல் நோக்கத்துடன் வழிநடத்தப்படாமல், எடுத்துக் கொண்ட அரசமைப்பு உறுதிமொழியால் மட்டுமே வழிநடத்தப்பட வேண்டும். முரணாக அமையும் எந்த நடவடிக்கையும் அரசமைப்புப் படி எடுத்துக் கொண்ட உறுதிமொழியை மீறுவது ஆகும்” என்றும் நீதிபதிகள் எச்சரித்துள்ளார்கள். இதோடு நிறுத்தி இருந்தால் கூட இத்தீர்ப்பு அறிவுரைத் தீர்ப்பாக மட்டுமே அமைந்திருக்கும்.

ஆளுநரின் சட்டவிரோதச் செயல்பாட்டுக்கு - உச்சநீதிமன்றம் உடனடியாக முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. 10 மசோதாக்கள் விவகாரத்தில் ஆளுநர் ஆர்.என்.ரவியின் நடவடிக்கைகள் ரத்து செய்யப்படுகிறது என்றும், இரண்டாவது முறையாக குடியரசுத் தலைவருக்கு அவர் மசோதாக்களை அனுப்பி வைத்தது செல்லாது என்றும் நீதிபதிகள் அறிவித்தனர். அரசியல் சாசனப் பிரிவு 142 இன் கீழ் உச்சநீதிமன்றத்துக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது என்றும், இந்த மசோதாக்கள் அனைத்தும் உடனே சட்டமாகி நடைமுறைக்கு வருவதாகவும் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். இந்த வகையில் இது மகத்தான தீர்ப்பாக அமைந்துவிட்டது.

**இந்த விவகாரத்தை உச்சநீதிமன்றத்துக்கு கொண்டு சென்று தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல - இந்தியாவுக்கே ஒரு மகத்தான தீர்ப்பை பெற்றுத் தந்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இப்படித்தான் பல ஆளுநர்கள் உட்கார்ந்து கொண்டு குடைச்சல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ‘ரிடையர்டுகளின் டம்மி பதவியான’ ஆளுநர் பதவிக்கு வந்து உட்கார்ந்து கொண்டு ‘ஆக்டிங் ஜனாதிபதி’யாக தங்களைக் கருதிக் கொள்ளும் ஆணவப் போக்குக் கொண்டவர்கள் அனைவர்க்கும் அணை போடும் தீர்ப்பைப் பெற்றுத் தந்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

**சட்டவிரோத ஆளுநர் இனியுமா தமிழ்நாட்டில் இருக்கப் போகிறார்?**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.4.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.4.2025) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (9.4.2025) தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் / முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டி.பி. யாதவ், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல்ராஜ், இன்ட்கோசேர்வ் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு. வினீத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (9.4.2025) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் நலத்துறை ஆணையர் சி.அ.ராமன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் பா. விஷ்ணு சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### அ.தி.மு.க. உறுப்பினர்கள் சட்டப் பேரவைக்கு காவி உடையில் வராமல்

# கருப்புச் சட்டை அணிந்து வந்ததை வரவேற்கிறேன்!

## சட்டப்பேரவையில் முதல்வர்!

சென்னை, ஏப். 10-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், கேள்வி நேரம் முடிவுற்றதும், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி எழுந்து ஒரு பிரச்சினையை எழுப்பினார்.

பேரவை நடவடிக்கைகளை நேரலை செய்வது குறித்து எடப்பாடி பழனிசாமி, குற்றச்சாட்டு கூறும் வகையில் தெரிவித்த கருத்துகளை பேரவைத் தலைவர் மறுத்து - உண்மையை விளக்கி உரையாற்றினார்.

இருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று உரக்கக் குரல் எழுப்பி கூச்சலிட்டவாறு இருந்தனர்.’

ஒரு கட்டத்தில் பேரவையில் இருந்து வெளிநடப்புச் செய்வதாக எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

அதனை அடுத்து எடப்பாடி பழனிசாமி மற்றும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

அவர்கள் பேரவையில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தபோது - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுந்து குறிப்பிட்டதாவது:-

**பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வினர் இன்று கருப்புச் சட்டை அணிந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கருப்புச் சட்டை அணிந்து வந்ததற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல வேளை, காவி உடையில் வராமல் கருப்புச் சட்டையில் வந்ததற்காக என்னுடைய அளவுகடந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.** (சிரிப்பு, மேஜையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் அவர்கள் கூறினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.4.2025) சென்னை, நேரு பூங்காவில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில், முதன் முறையாக மாநில அளவில் நடைபெறும் சுய உதவிக்குழு மகளிருக்கான பன்முகக் கலாச்சாரப் போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், சுய உதவிக்குழு மகளிர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.